**நாள்: 20.07.2026**

**OS.No.97/2022**

PW2. பெயர்: மக்கள் அன்பன்

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**குறுக்கு விசாரணை**

1. நான் வாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதி தூயமணி எனக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். வாதியின் தோட்டத்தினை நான் தான் பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். வாதிக்கும், பிரதிவாதிக்கும் எத்தனை ஆண்டுகளாக வரவு, செலவு இருந்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியாதென்றால் சரிதான். 15.09.2019ம் தேதியன்று வாதியின் வீட்டின் நானும், வாதியும் தான் இருந்தோம் என்றால் சரிதான். அன்றைய தேதியில் பிரதிவாதியுடன் பரமராஜ் என்ற நபர் இருந்தார், அவர்தான் பிரதிவாதியை அழைத்து வந்தார். மேற்படி தேதியில் மேற்படி நான்கு நபர்களை தவிர வேறுயாரும் இல்லை. கடனுறுதி சீட்டை பிரதிவாதி முருகன் என்பவர் தான் வாங்கி வந்தார்.

2.பிரதிவாதி முருகன் நிறைய கடனுறுதி சீட்டுகளை கையில் வைத்திருந்தார், எத்தனை என்று எனக்கு தெரியாது. நாங்கள் இருக்கும் போது தான் பிரதிவாதி முருகன் வந்தார். வாதியிடமிருந்து பிரதிவாதி ரூ.9 லட்சத்தை மேற்படி தேதியில் வாங்கினார். மேற்படி பணத்தை பெற்றுக் கொண்டு தான் கடனுறுதி சீட்டில் கையொப்பம் செய்தார். பிரதிவாதி முருகன் வைத்திருந்த அனைத்து கடனுறுதி சீட்டுகளிலும் கையெழுத்து போட்டு வாதியிடம் கொடுத்தாரா என்றால், மூன்று கடனுறுதி சீட்டுகளில் மட்டும் கையொப்பம் செய்து வாதியிடம் கொடுத்தார். நான் M.A., படிப்பு படித்துள்ளேன். எனக்கு

கடனுறுதி சீட்டு பற்றி தெரியும். கடனுறுதி சீட்டை பரமராஜ் என்ற நபர் பூர்த்தி செய்தார். மூன்று கடனுறுதி சீட்டுகளில் தொகையும், பிரதிவாதியின் கையொப்பம் ஒரு பேனா மையினாலும், மற்ற விபரங்கள் மற்றொரு பேனா மையினாலும்நிரப்பப்பட்டுள்ளதென்றால்சரிதான்.

3. கடனுறுதி சீட்டு தொகையை தவிர வாதியும், பிரதிவாதியும் வேறு விபரங்கள் ஏதும் பேசவில்லை. நான் எத்தனை கடனுறுதி சீட்டுகளில் சாட்சியாக கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் மூன்று கடனுறுதி சீட்டுகளில் சாட்சியாக கையொப்பம் போட்டுள்ளேன். மேற்படி தேதியில் பிரதிவாதி, வாதிக்கு வேறு எந்த ஆவணமும் எழுதி தரவில்லை என்றால் சரிதான். கடனுறுதி சீட்டுகளை பிரதிவாதி வாதிக்கு பொறுப்புக்காக எழுதிக்கொடுத்தாரா என்றால் இல்லை, பணத்தை பெற்றுக் கொண்டு எழுதிக் கொடுத்தாரா என்றால் ஏற்கனவே அவர் வங்கி மூலம் பணத்தை பெற்றுக் கொண்டார். 2012ம் ஆண்டில் பிரதிவாதி, வாதியிடம் ரூ.15 லட்சம் கடன் வாங்கிய விபரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4.அதற்கு ஆதரவாக பிரதிவாதி பூர்த்தி செய்யப்படாத 10 கடனுறுதி சீட்டுகளை கையொப்பமிட்டு வாதிக்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதன்பின்பு வாதிக்கும், பிரதிவாதிக்கும் பேச்சுவார்த்தை நடந்து அசல் மற்றும் வட்டித்தொகைகளுக்காக ரூ.30 லட்சம் பேசி, ரூ.29 லட்சத்தை வாதிக்கு பிரதிவாதி வங்கி மூலம் செலுத்திய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மீதமுள்ள ரூ.1லட்சத்தினை கம்பத்தில் வாதிக்கு பாத்தியப்பட்ட ஒரு கடையினை அப்துல் காதர் என்ற நபருக்கு வாடகைக்கு விட்டதாகவும், ரூ.1லட்சம் பணத்தை அப்துல் காதரிடம் கொடுத்து அசல் வாடகை ஒப்பந்தத்தை திரும்ப வாங்கி வைத்துக் கொள்வதாக பேசி, அதன் அடிப்படையில் பிரதிவாதி, அப்துல் காதரிடம் ரூ.1லட்சம் பணம் கொடுத்த விபரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி சென்னையில் துணை வேந்தராக

பணிபுரிந்து வருகிறார் என்பது பற்றி எனக்கு தெரியும்.

5.சென்னையில் தான் வசித்து வருவதால் கடனுறுதி சீட்டுகள் சென்னையில் இருப்பதாகவும், அதனை பிற்பாடு எடுத்து தருவதாக பிரதிவாதியிடம் சொன்ன விபரம் பற்றி எனக்கு தெரியாது. வாதியின் தோட்டத்தை மனோகரன் மற்றும் ராஜசேகரன் ஆகியோர் விலைக்கு வாங்குவதற்காக பிரதிவாதி அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு கிரையம் பேசியதற்காக பிரதிவாதி, வாதிக்கு வங்கி பரிவர்த்தனை மூலம் ரூ.90 லட்சம் செலுத்திய விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த கிரைய பத்திரம் எழுதுவதற்கு வாதி, பிரதிவாதிக்கு ஆதரவாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார் என்றும், ஒப்பந்தம்ஒப்பந்தம் அதற்கு பிரதிவாதி மறுத்து வந்தார் என்றும், அந்த முன்விரோதம் காரணமாக பிரதிவாதி எழுதிக் கொடுத்திருந்த கடனுறுதி சீட்டுகளை நானும், வாதியும் நிரப்பி பொய்யாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அது தொடர்பாக என் மீதும், வாதி மீதும் பிரதிவாதி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தார் என்றால் புகார் கொடுத்தார் ஆனால் இந்த வழக்கிற்கும், அந்த புகாருக்கும் சம்பந்தமில்லை.

6. கடனுறுதி சீட்டுகளுக்கு வாதி பிரதிவாதிக்கு எப்போது பணம் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது, வாதி, பிரதிவாதியிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். நான் குறிப்பிடுவதைப் போல பிரதிவாதி, வாதிக்கு தாவா கடனுறுதி சீட்டுகளை எக்காலத்திலும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் குறிப்பிடுவது போல் பிரதிவாதி, வாதியிடம் ரூ.9 லட்சம் கடன் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நானும், வாதியும் பிரதிவாதியிடம் பணம் பறிக்க

வேண்டுமென்ற நோக்கத்திற்காக வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

A. SARAVANAKUMAR

Digitally signed by A. SARAVANAKUMAR
Date: 2026.07.20 17:47:54 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.